கழிவுநீரினை சுத்திகரிப்பு நிலையத்திற்குக் கொண்டு செல்ல தடுப்புச் சுவரின் வெளிப்புறத்தில் கழிவுநீர் வடிகால் (Baby Canal) அமைத்தல், தேவையான இடங்களில் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், நடைபாதை அமைத்தல், கரையோர பூங்கா மற்றும் அலங்கார விளக்குகள் அமைத்தல், அணைக்கட்டு பகுதியினை மேம்படுத்துதல் மற்றும் நதியினை தூர்வாரி சுத்தப்படுத்துதல் ஆகிய பணிகள் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்து, வரும் காலத்தில் நொய்யல் ஆறு மாசடையாமல் இருப்பதற்கான பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஆ) நெடுஞ்சாலைகளில் சாலை விபத்து பகுதிகளில் தானியங்கி புகைப்படக் கருவிகள் மற்றும் வாகன கண்காணிப்பு கட்டுப்பாட்டு அறைகள் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைகளில் அதிகமாக சாலை விபத்துகள் ஏற்படும் பகுதிகளைக் கண்டறிந்து, அவ்விடங்களில் சோதனை அடிப்படையில், வாகனப் பதிவெண் பலகையினை படிக்கும் தானியங்கி புகைப்படக் கருவிகள் மற்றும் வாகன கண்காணிப்பு கட்டுப்பாட்டு அறைகள் 25 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் சாலைப் பாதுகாப்பு நிதியிலிருந்து அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. சுற்றுச்சூழல் மற்றும் போக்குவரத்துத் துறைகள் தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகம் முழுவதும் குளத்துப் பகுதிகளிலே, குளத்தையே ஆதாரமாக நம்பி வாழ்ந்துகொண்டிருக்கின்ற குளத்துப் பாசன விவசாயிகள் அனைவருக்கும் குடிமராமத்து திட்டத்தைக் கொண்டு வந்து, இலவசமாக வண்டல் மண் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லி, பல்லாயிரம் கோடி ரூபாய் அரசு கஜானாவுக்கு பணத்தை மிச்சப்படுத்தியுள்ளார்கள். அதேபோல், விவசாயிகளுக்கும்

2018 ஜூலை 9] [திரு. கே.சி. கருப்பணன்]

ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் பணத்தை மிச்சப்படுத்தி, குளத்துப் பாசன விவசாயிகள் மனதில் நிறைந்து வாழ்கின்றார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அதேபோல, சட்டப் போராட்டம் நடத்தி, காவேரியை மீட்டு வந்து, காவேரி பாசன விவசாயிகள் மத்தியிலே நிறைந்து வாழ்பவர்; மதுரைக்கு AIIMS மருத்துவமனையைக் கொடுத்து, தென்னக மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்பவர்; 1,250 கோடி ரூபாயை அள்ளிக்கொடுத்து, அத்திக்கடவு—அவிநாசி திட்டத்தைக் கொண்டு வந்து கொங்கு மக்களுடைய மனதிலே இடம்பிடித்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். திருப்பூரிலே காலம் காலமாக ஏற்றுமதியாளர்களும், வெளிநாட்டவர்களும் வந்து செல்கின்ற அந்த இடம் தூய்மை இல்லாமல் இருக்கிறதென்று ஏற்றுமதியாளர்கள் எல்லோரும் இந்தத் திட்டத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய மனதைத் திருப்திப்படுத்துவதாக இத்திட்டம் அமைந்துள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் இல்லையென்று சொன்னால் திருப்பூர் இல்லை என்கின்ற அளவுக்கு 2011 ஆம் ஆண்டு 200 கோடி ரூபாயை வட்டி இல்லா கடனாகக் கொடுத்து, திருப்பூருடைய தொழில் வளத்தைக் காத்தார்கள்.

அதேபோல் இன்றைக்கு திருப்பூர் மாநகரை அழகுபடுத்துவதற்காக நொய்யல் ஆறு, நல்லாறு பகுதிகளைச் சுத்தப்படுத்தி, அழகுபடுத்துவதற்கு 150 கோடி ரூபாயை ஒதுக்கிக் கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சுற்றுச்சூழல் துறை சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாநகராட்சிப் பகுதியிலே நொய்யல் ஆற்றங்கரையிலே இருக்கின்ற மக்களுடைய நலன் காக்கின்ற வகையிலே 150 கோடி ரூபாயை வழங்கி, அந்த இரு வசிப்பிடங்களிலும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு உத்தரவிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு திருப்பூர் மாவட்ட மக்களின் சார்பிலே என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற 2020 ஆம் ஆண்டுக்குள் போக்குவரத்துத் துறையில் விபத்துகளையும் உயிரிழப்புகளையும் பாதியாகக் குறைக்க வேண்டுமென்ற இலக்கினை அடைவதற்காக விபத்துகள் அதிகமாக நடைபெறக்கூடிய இடங்களைக் கண்டறிந்து, அங்கு கேமராக்களைப் பொருத்தி, கட்டுப்பாட்டு அறைகளை உருவாக்க 25 கோடியே 23 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு போக்குவரத்துத் துறையின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

5. தகவல் கோரல்

(அ) சேலம், பசுமை வழிச் சாலைத் திட்டம் தொடர்பான போராட்டம் மற்றும் மாற்றுப் பாதையில் நிறைவேற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

முற்பகல் 11–10

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய அரசினுடைய திட்டங்கள் எதுவாக இருந்தாலும், மக்களினுடைய நலனை மையமாக வைத்துத்தான் அந்தத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. அந்த வகையில் மக்களும் சுதந்திரமாகத் தங்களுடைய கருத்துகளைத் தெரிவிப்பதற்கு, அவர்களுக்குரிய வாய்ப்பை வழங்கிட வேண்டும். அதேபோல, மக்கள் மட்டுமல்ல, மக்களுக்கு பணியாற்றக்கூடிய அரசியல் கட்சிகளும் அதுகுறித்து கருத்துகளை எடுத்துச்சொல்ல, ஆய்வு நடத்த எல்லாவித உரிமைகளையும் படைத்ததாக இருக்கிறது. குறிப்பாக, சாலைத் திட்டத்தைப் பற்றி மக்களும், அரசியல் கட்சிகளும் கருத்துகளே சொல்லக் கூடாது என்று வாய்ப்பூட்டு பூட்டக்கூடிய வகையிலே, இன்றைக்கு இருக்கக்கூடிய காவல் துறை தொடர்ந்து பணிகளைச் செய்து வந்து கொண்டிருக்கிறது. அதுபற்றி விளக்கிட வேண்டுமென்ற அடிப்படையிலே, ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதற்கு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.*